## அரியலூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
(26.04.2017 முதல் 30.04.2017 வரை)

தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம், ஆடுதுறை– 612 101

போன்: 0435 2472098 E-mail: dirtrri@tnau.ac.in Fax: 0435 2472881


==========================================================================

தேதி:25.04.2017

### கடந்த 4 நாட்களில் நிலவிய வானிலை (21.04.2017– 24.04.2017)

| காரணிகள் | கடந்த நாட்களில் வானிலை |
|---|---|
| மழை (மி.மீ.) | 0.0 |
| அதிகபட்ச வெப்பநிலை (°C) | 40 – 41 |
| குறைந்தபட்ச வெப்பநிலை (°C) | 28 – 29 |
| மேகமூட்டம் (ஆக்டா) | 4 – 5 |
| காற்றின் ஈரப்பதம் (%) | 31 – 60 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 7 – 12 |

### அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு

| காரணிகள் | எதிர்பார்க்கப்படும் வானிலை | | | | |
|---|---|---|---|---|---|
| | நாள் 1 26.04.2017 | நாள் 2 27.04.2017 | நாள் 2 28.04.2017 | நாள் 4 29.04.2017 | நாள் 5 30.04.2017 |
| மழை (மி.மீ.) | 0 | 0 | 0 | 0 | 0 |
| அதிகபட்ச வெப்பநிலை (°C) | 41 | 41 | 41 | 40 | 40 |
| குறைந்தபட்ச வெப்பநிலை (°C) | 28 | 28 | 28 | 29 | 29 |
| மேகமூட்டம் (ஆக்டா) | 4 | 4 | 4 | 4 | 4 |
| காற்றின் ஈரப்பதம் (%) | 35 – 55 | 35 – 55 | 35 – 55 | 35 – 55 | 35 – 55 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 8 | 8 | 8 | 10 | 10 |
| காற்றின் திசை | வடக்கு | வடக்கு | வடக்கு | வடக்கு | வடக்கு |

26.04.2017 முதல் 30.04.2017 வரை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மழை இல்லை.

***வேளாண் அறிவுரைகள் :***

**பயிர் : நெல் மற்றும் இறவை உளுந்து**

- கோடை நெல் நாற்றங்காலில் இலைசிலந்தியின் தாக்குதல் பரவலாக தென்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த டைக்கோபால் 600 மி.லி. / ஏக்கர் அல்லது நனையும் கந்தகத்தூள் 400 கிராம் / ஏக்கர் என்ற அளவில் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.
- கோடை நெல் நாற்றங்காலில் இலைப்பேன் தாக்குதல் பரவலாக தென்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த குளோரிபைரிப்பாஸ் 2.5 மி.லி/லி தெளித்து கட்டுபடுத்தலாம்.
- நெல் தரிசில் பயிரிடப்பட்ட இறவை உளுந்து பயிரில் வெள்ளை ஈ பரவலாக தென்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த அசாடிராக்டின் 0.03 சதம் (3 மி.லி./லி) ஒட்டும் திரவத்துடன் கலந்து காலை அல்லது மாலை நேரங்களில் கைத்தெளிப்பான் கொண்டு தெளிக்கவும். சேதம் அதிகரிக்கும் போது இமிடாகுளோபிரிட் 200 எஸ்.எல் 40 மி.லி (ஏக்கர்) 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.
- இறவை உளுந்து பயிருக்கு விதைத்த மூன்றாம் நாள் பெண்டிமெத்தலின் களைக்கொல்லியை ஏக்கருக்கு 1.3 லிட்டர் என்ற அளவில் கைத்தெளிப்பான் கொண்டு தெளிக்கவும்.

**கால்நடைகளுக்கு**

- கோழிகளுக்கு ராணிக்கட் நோய் வராமல் தடுக்க தடுப்பூசி போடவும்.
- பால் கறக்கும் மாடுகளின் மீது காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை 2 மணி நேர இடைவெளியில் தண்ணீரைத் தெளிப்பதனால் பால் உற்பத்தி குறைவது தவிர்க்கப்படுகிறது.

ஒம்/- வெ. இரவி.
இயக்குநர்

/உண்மை நகல்/

பேராசிரியர்(உழவியல்)